**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.91/2023**
**Deposition of witness of plaintiff – P.W.2**
**29.07.2025**

| | | |
|---|---|---|
| **Name** | : | சரவணன் |
| **Father /Husband Name** | : | உலகநாதன் |
| **Village** | : | கீழகுறிச்சி |
| **Taluk** | : | இலுப்பூர் |
| **Age** | : | 48 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 29th day of July 2025.

**சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் வாதி தரப்பு 2வது சாட்சி. ஆவணங்கள் தாக்கல் இல்லை.

**(தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.)**

**1ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். எவ்வளவு சொத்து விவசாயம் செய்கிறேன் என்றால் 5 ஏக்கர் விவசாயம் செய்கிறேன்.

2. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு சொந்தமான சொத்துக்கள் இல்லை என்றால் கொஞ்ச தூரத்தில் உள்ளது.

3. வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியும். அவர்கள் அனைவரும் கீழக்குறிச்சியை சேர்ந்தவர்கள். பிரதிவாதிகள் அனைவருக்கும் நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார், எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்திற்கு உரிமை கோருகிறார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. பிரதிவாதிகள் என்ன ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் உரிமை கோருகிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

6. பிரதிவாதிகளில் யார் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

7. எனது நிரூபண வாக்குமூலத்திற்கு வாதி விவரம் சொன்னார் என்றால் இல்லை, நான் தான் சொன்னேன்.

8. வாதி சொல்லி தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றும், தாவா சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் இருந்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் தான் மற்ற பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**4ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.